


ஏ. எல். அருணாசலஞ் செட்டியார்.
தேவகோட்டை ஜமீன்தார். கருணாநந்தா.
திருக்கழுக்குன்றம்.

24-3

கருணனந்தஸ்வாமிகளின் அருஞ் செயல்களைக்குறித்த
சில முக்கிய அபிப்பிராயங்கள்.

கோட்டையூர், 16—1—26.

ஷை சாதுசங்க ஆதரவில் மதராஸ் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் பொங்கல் புதுநாள் கொண்டாட்டம் மிகவிமரிசையாக நடந்தேரியது. அச்சமயம் மதராஸ் கவர்ன்மெண்ட் முதன் மந்திரி, கனம் பனகால் ராஜா அவர்கள் அக்கிராசனம் வகித்தார். பொங்கல் புதுநாள் என்னும் விஷயத்தைக்குறித்து, இங்கிலீஷ், தமிழ் முதலியபாஷைகளில் கல்விமான்கள் அதிக சாதுரியத்துடன் உபன்யாசம் செய்தார்கள். திரளான ஜனங்கள் பெரியோரும், மற்றவரும் ஸ்திரீகளும், குழந்தைகளும் விஜயம்செய்து ஆனந்தமடைந்தார்கள். நான் நேரில் கண்ணுற்று சந்தோஷமடைந்தேன். ஸ்ரீகருணாநந்த ஸ்வாமிகள் ஒருவராக அதிக சிரமத்துடனும், வைராக்கியத்துடனும் ஜனங்கள்மனதில் தெய்வபக்தி, கல்வி. அறிவு முதலிய சிறந்த நல்லொழுக்கங்களை புகட்டுவதற்கு நான் அதிகச் சந்தோஷத்துடனும் இதை எழுதலானேன். இங்ஙனம்,

க. வீ. அ. ள. காசி விஸ்வநாதந் செட்டியார்,

காரைக்குடி, 15—1—25.

ஸ்ரீமது கருணனந்தஸ்வாமி அவர்களுக்கு தாங்கள் சங்கராந்திக்காக அனுப்பிய வாழ்த்தும் கிடைத்தது. அதைப்பார்த்து மகிழ்ந்தேன்.

தங்கள் சாதுசங்கமகா சபையின் ஆதரவில் நடக்கும் பிரசங்கத்திற்கு வந்து கேட்டு ஆனந்திக்காதவனுகிவிட்டேன். தங்கள் அன்புள்ள

கி. அ. நா. அ. ராா. ம. அண்ணாமலை செட்டியார்.

பள்ளத்தூர், 21—1—26.

தாங்கள் அன்போடு அனுப்பிய பொங்கல் கொண்டாட்ட பத்திரிகை வந்து சேர்ந்தது ரொம்பவும் சந்தோஷமடைந்தேன்.

சொ. மு. அ. மெ. சொ. மெய்யப்பச் செட்டியார்.

வேப்பேரி, மதராஸ், 20—1—25.

ஸ்ரீலஸ்ரீ கருணனந்தஸ்வாமி அவர்களுக்கு அநேக நமஸ்காரம்.

சங்கிராந்தியின் பலப்ருப்தியை எனக்கு விசேஷமாயும், சுபகரமாயும் தந்தருளவேண்டுமென தாங்கள் ஈசுரப்பிரார்த்தித்து அனுக்கிரகித்தெழுதிய, திருக்கழுக்குன்றத்தின் அழகிய படமமைப்புற்ற அச்சிட்டத் திருமுகத்தைப் பெற்று மகிழ்ந்தேன். அதற்காக என் நமஸ்காரத்தை அற்பணஞ் செய்கிறேன். இங்ஙனம் சிடமித்ரன்,

Sir M. C. முத்தையச் செட்டியார்

நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை.

நமது கருணனந்தஸ்வாமிகள் நாடெங்கும் ஆன்மவீரியம் பரவச்செய்வதையே தமது முதனோக்கமாக்கொண்டு அதற்காக தமது சக்தியையும் காலத்தையும் உபயோகப்படுத்திவருகிறார்.

Sir T. சதாசிவ அய்யர்.

Dewan Bahadur
A. M M. MURUGAPPA CHETTY.

Pallatur, 4—1—26.

My Dear Mr, Swamiji,

It is very kind of you to congratulate me on the distinction conferred on me on the occasion of the New Year and I thank you heartily for the same.

Yours sincerely,
(Sd.) A. M. MURUGAPPA CHETTY.

T V. SESHAGIRI IYER.

'GOVARDHAN'
Kilpauk, 6—1—26.

Dear Swami,

I thank you for your letter of cougratulations.

Yours sincerely,
(Sd.) T. V SESHAGIRI IYER.

Dewan Bahadur
Sir T. N. SIVAGNANAM PILLAI.

'THE HERMITAGE'
Mylapore, Madras. 7—1—26.

Dear Swamiji,

Thanks very much for your kind congratulations.

Yours devotedly,
(Sd.) T. N, SIVAGNANAM PILLAI.

The Hon'ble
Mr. P. RAMARAYANINGAR.
Chief Minister.

Kilpauk,
14—1—26.

Dear Swami Karunananda,

Thanks for your kind greetings of Maha Sankaranthi.
Wishing you a happy New Year and many returns.

Yours sincerely,
(Sd.) RAMARAYANINGAR,
The Rajah of Panagal.

C. V RAGAVA CHETTY, J.P.
Shrotriemdar of Enadur.

President & Dharmakartha of S. K. P D. Charities.

Honorary Presidency Magistrate.

34, Devaraya Mudaly Street,
Park Town, P O.,
Madras, 14—1—26.

Sir,

I accept your Maha Sankaranthi Greetings with much pleasure.

(Sd) C. V. RAGHAVA CHETTY.

AR. KALIRAJA,
Zamindar's Son, Devakota.

Devakota, 15—1—26.

Dear Swamigal,

Thanking you for kind Maha Sankaranthi greetings. I wish the same happy Pongal day.

Yours truly,
(Sd) AR. KALIRAJA.



கருணாநந்தா. சர்வானந்தா. நமசிவாய P. பனகால்ராஜா. கந்தசாமி ராமசாமி கிருஷ்ணபோன்சிலே.
தம்பிரான். முதலியார். முதலியார்.

P. இராமனாதன்.

பொங்கல் பண்டிகை யென்பது என்ன

உத்திராயணம் தஷணாயணம் யென்று இரண்டு, தைமீ முதல் ஆனிமீ கடைசி வரையிலும் உத்திராயணம். ஆடிமீ முதல் மார்கழிமீ கடைசிவரையிலும் தஷணாயனம் இந்த இரண்டு அயனங்கள் சேர்ந்தது நமக்கு 1 வருஷம் இது தேவர்களுக்கு 1 பகல், 1 ராத்திரி சேர்ந்த 1 நாள் இந்த உத்திராயணம் 6 மாதம் காலம் தேவர்களுக்கு பகல் தஷிணாயநம் 6 மாதகாலம் தேவர்களுக்கு ராத்திரீ. நமக்கு பகல் 30 நாழிகை ராத்திரி 30 நாழிகை சேர்ந்தது 60 நாழி நமக்கு 1 நாள். இது போலவே தேவர்களுக்கு மாதம் 1-க்கு 5 நாழியாக 12 மாதத்திர்க்கு 60 நாழி அப்பொழுது மார்கழி மாதம் ராத்திரி அந்தியமாகிய 30 நாழிகை. அதாவது பஞ்ச பஞ்ச வுஷக்காலம். அந்த மார்கழி மாதம் வுஷக்காலம் அப்பொழுது தேவர்கள் தங்களுடைய நித்தியகர்மானுஷ்டாநங்களை முடித்து பகவத்பூஜை பண்ணுவது வழக்கம் நாமும் யெல்லா தேவஸ்தானங்களுக்கும் பூஜைபண்ணுவது வழக்கம் சாஷாத் பகவான் கோபாலகிருஷ்ணன் கீதையில் விபூதி அத்தியாயத்தில் மார்கழிமீ நானே யென்று சொல்லியிருக்கிறார் ஆகையினாலே அது தேவர்களுக்கு வுற்றமுமான மாதம்.

2. ஆனால் தக்ஷணாயநத்தில் யெக்கினயாகாதி விவாஹங்களும் பண்ணப்படாது யென்று சொல்லுவார்கள் தனுர் மாதத்தில் சூர்யோதயாத்பூர்வம் பகவத்பூஜை ஆனதும் பொங்கல் பண்ணி பகவானுக்கு நைவேத்தியம் பண்ணுவது வழக்கம். தேவர்களுக்கு அதுபோலவே நமக்கும் அப்படி- சிலர் இந்த அனுஷ்டானம் விட்டவர்களும் அனுஷ்டானங்களை அனுசரித்தவர்களும் அந்தவுதயமார்த்தாண்டன் தன்னுடைய கிரணங்களுடன் சாக்ஷாத் சூர்யபகவான் உதயாசலத்தில் இருந்து தைமீ முதல் தேதி மகாருசியில் பிரகாசிக்கும் வுதயசாலமாகிய வுத்திராயண புண்ணியகாலத்தில் நாம் யெல்லோரும் புதுஅரிசியில் பொங்கல் செய்து நைவேதனம் பண்ணுவது வழக்கம் அதர்குதான் பொங்கல் யென்று சொல்லுவார்கள் வுத்திராயணம் பிறந்த மருதினத்தில் தேவர்கள் தேவலோகத்தில் காமதேனுவை பூஜைபண்ணுவது வழக்கம் அதுபோலவே நாம் இங்கே பசுக்களை பூஜைபண்ணுவது வழக்கம் அதர்குதான் மாட்டு பொங்கல் யென்று சொல்லுவது வழக்கம்.

3. இந்த மாதம் சங்கரமணத்தில் பிதுருதேவதைகளுக்கு தர்பணம் பண்ணுவது வழக்கம். இது வொவ்வொரு மாதத்

தில் இருக்கிறதே இந்த மாதம் விசேஷமென்ன வென்றால் ஷண்வதி ஸ்ரார்த்தம் யென்று சொல்லப்பட்ட 96 ஸ்ரார்த்தங்களிலே சேர்ந்தது தவிர ஸ்ரீவல்லிபுத்தூர் ஆண்டாள் நோன்புனூர்து பூர்தி ஆனமாதம்.

4. இதுவும் அன்றி அர்சராதிமார்கம் தூமாதிமார்கம் யென்று இரண்டு. அர்சனாதிமார்க்கமாகிய வுத்தராயணத்தில் பரமபதம் சென்றால் மஹாபுண்ணிய லோகமாகிய வைகுண்டமும் அல்லது கைலாயமும் அடைவார்கள் திரும்பிவராத மோக்ஷசாம்ராஜ்ஜியம் அடைவார்கள். தூமாதிமார்கம் யென்று சொல்லும் தக்ஷணாயணத்தில் பரமபதம் சென்றால் சந்திரலோகம் வரையில் போய் திரும்பி இந்த பூலோகத்திற்கே வந்துவிடுவார்கள். ஆகையினால் தான் பீஷ்மாசாரியார் வுத்திராயணம் வரட்டுமென்று சாதல்பத்தில் படுத்துக்கொண்டு இருந்தார். இந்த உத்திராயணம் தக்ஷணாயணத்தைப்பற்றி பகவத்கீதையில் 8 அத்தியாயத்தில் 24 சுலோகத்தில் சாக்ஷாத் பரமாத்மா கிருஷ்ணன் அருஜனனுக்கு சொல்லுகிறார்.

அக்கிர்ஜோதி ரஹசுக்லஹா ஷண்மாசா உத்தராயணம்
தத்ரபிரயாதகச்சந்தி (பரம்ம) விதோஜந:
தூமோராத்திரி ஸ்ததா கிருஷ்ணஹ: ஷண்மாசா தக்ஷணயனம்
தத்ர சாந்ரமசம் ஜோதியி: யோகிபிராப்ய நிவர்த்ததே.

25வது சுலோகம்.

இந்த பொங்கல் மாதமாகிய தைமாதத்திற்கு இவ்வளவு வைபோகம் இருக்கிறது இன்னும் சில புராணங்களில் இந்திரன் மழைவருஷிப்பவன் ஆகலால் அவன் செய்த நன்மையும் பொருட்டு தைமாதத்தில்அருத்த முதல்பயிரை பொங்கல்யிட்டு மழை கடவுளாகிய இந்திரனுக்கு ஆராதித்து வந்தனர். கிருஷ்ண அவதாரத்தில் பகவான் ஜனங்கள் இந்திரனுக்கு செய்துவந்த அந்த ஆராதனையை மழைவனத்திற்கு ஆதாரமான மலைக்குச்செய்துவர கட்டளை இட்டார். ஜனங்கள் அக்கட்டளைபடி கோவர்தனகிரியை ஆராதித்துவந்தனர். இந்தவிஷயத்தை அரிந்த இந்திரன் ஜனங்கள்மீது கோபத்தால் விடாமழை பெய்தன அப்போது ஜனங்கள் கிருஷ்ணனை பிரார்த்திக்க கோவர்தனகிரி யென்னும் பர்வதத்தை யெடுத்து ஜனங்களை சம்ரக்ஷித்தினர் இதை இந்திரன் அறிந்து பகவானுக்கு நமஸ்காரம் பண்ணவே அன்ரயதினம் இந்திரனுக்கு போகியென்ர நாமதேவத்தை கொடுத்து கொண்டாடினார்கள் மறுநாள் பொங்கல்யென்றும் அதற்கு மறுநாள் மாட்டுப்பொங்கல் யென்றும் யேர்பட்டதாக சில கிரந்தங்கள் யேர்பட்டிருக்கிறது.



சர். பி. ராஜகோபாலாச்சாரியார்.   திருக்கழுக்குன்றம்.

JUSTICE, Wednesday the 28th January 1926.

ALL-INDIA SADHU SANGHA MAHA SABHA.

PONGAL CELEBRATIONS.


(From a correspondent.)

Under the auspices of the above Sabha, a public meeting was held on Saturday, the 16th January 1926, at the Pachaiyappa's College Hall, Madras, at 5 p.m., by Swami Karunananda, the President and Founder of the Sabha. The Hon'ble the Raja of Panagal presided on the occasion. There was a very large attendance including ladies, gentlemen, students and children, prominent among these were Dewan Bahadurs V. Tirumalai Pillai and Salla Gurusawmy Chettiar, Swami Sharvananda of Ramakrishna Mission, Sree Namasivaya Thambiran of Thiruvaduthurai Atheenam, Swami Lakshmananandha, Balakrishna Odayar Zamindar of Thannirkunram, Sreeman K.V. A. L. Kasiviswanatha Chettiar of Kottaiyur, T. T. A. Kuppuswamy Chettiar, Jayashankar Thakkoor Bapalal, Diamond Merchant, T. Rajagopalachariar, Shrotriemdar of Ernavoor, Rao Bahadurs R. Krishna Rao Bhonsle, Dr. C. Natesa Mudaliar, M.L.C., and

T. Varadarajulu Naidu, A. Ramasawmy Mudaliar, B.A.B.L. M. L. C., P. Ramanathan, Advocate, P. V. Nataraja Mudaliar, B.A.,B.L. P. C. Subrahmanyam Pillai, B.A.,B L. Secretary, Pachayappa's Charities, T. Sundara Rao Naidu, B.A., B.L., T. N. Nallasivam Pillai, B.A., B.L., C. N. Chokkalinga Mudaliar, B.A.,B.L., P. T. Kumaraswamy Chetty, B. A., V. Sivaprakasa Mudaliar, B.A., B.L., M. Kandasawmy Mudaliar, B.A., Professor P. Subrahmanya Iyah, A. C. Parthasarathy Naidu, N. Kailasapathy Mudaliar, B.A., G. Sambasivam Pillai, Contractor, Amjikarai, Rao Sahib C. Kandaswamy Mudaliar, M. M. Kumaraswamy Mudaliar, Trustee of Thirukalikundram Temple and many others.

At 5 p.m., the Hon'ble the Rajah of Panagal arrived and was received by Swami Karunauanda, the President of the Sabha, Rao Sahib C. Kandaswamy Mudaliar, the Secretary and Rao Bahadur R. Krishna Rao Bhonsle conducted to the hall which was decorated with flags thoranams. A group photo with the Swamiji was then taken.

At 5-20 the meeting commenced with a prayer and dialogue by two girl students of the Sukurtha Balika Patasala. Rao Bahadur R. Krishna Rao Bhonsle then proposed the Hon'ble the Rajah Sahib of Panagal to take he chair. In doing so he briefly referred to the activities of Swami Karunanandha, President and Founder of the Sabha and said that he had dedicated his whole life to the service of hmmanity, instead of living a secluded life. He recently tourned in Saigon, Singapore, Penang and Malay States for the purpose of raising funds for his Ashramam at the Eagle Mount (Thirukkalikundram) near Chingleput for feeding the sadhus and returned only a fortnight ago after achieving his object.



சாது சங்க மஹா சபா,
கடியாபட்டி.

In Singapore, Penang, Taiping and Melacca, Swamiji was very enthusiastically received and public addresses were read and presented to him. As this is the first meeting of the Sabha after his return to India, I feel it is the my duty to thank the Swamiji on your behalf and also on my behalf for his ever willing, disinterested services to his fellow beings.

This propossition was seconded by Mr. T. Rajagopala Chariar, Shrotriemdar of Ernavoor.

Amidst loud applause and cheers, the Hon'ble the Rajah took the chair. He said that Pongal was one of their most ancient national festivals, particularly in South India. The offerings they made on Pongal day were dedicated to the Sun God. In all the ancient religions. the Sun was given a prominent place because without him they could not have anything in the world. Life and its activities. whether physically or chemically or physiologically is impossible without the sun's rays. In short every change in nature is due to sun's rays. That was really the reason why in Hindursm the very foundations of religion was based on the worship of God in the form of sunlight. Gayatri Japam reminded this aspect.

Mr. M. Kandasawmy Mudaliar B.A., then spoke on Pongal and Its Significance. He pointed out that patriotism would hold sway in a country where religion had a fast hold on the people. The pongal day was the day of recognition of the bounty of nature and it was also made an occasion for relations to meet each other and enquire after each other's welfare.

Mr. A. C. Parthasarathy Naidu spoke a few words in English and Hindustani. He said that he knew the Swamiji for the last 25 years as one who worked for the welfare of his fellow beings.

Professor P. Subramania Aiyah of Pachaiyappa's College next spoke and he said that he considered Pongal an all India festival because it was celebrated also in Bengal and Northern India. The Sankaranthi festival was a great contribution, not only to the science of chronology but also to the science of astronomy. It also inaugurated a new year, ushering in new things, while Bhogi cast aside the old and worn out things.

The Hon'ble the Rajah of Panagal in his concluding remarks said that he was glad to observe that the celebration of Pongal made by this Sabha was a unique one and he congratulated the Swamiji and the other organisers on their organising this unique function so successfully. The Swamiji's name is Karunanandha and he has really extended his Karuna to him by honouring him to preside over this function. He therefore once again thanked the Swamiji and the organisers for inviting him to preside over the celebrations.

Dewan Bahadur Salla Guruswamy Chetty proposed a hearty vote of thanks to the Chairman and the numerous visitors. The Chairman and the speakers were garlanded and sugar candy and fruits were distributed to one and all. The pleasant function terminated at 7-30 p.m., by the singing of the National Anthem.



சர். டி. சதாசிவ அய்யர். கிருஷ்ணவேணி. சுகிர்தா.

விருத மகிமை

கிருஷ்ணவேணி } 10 வயதுள்ள சிறுமிகள்.
சுகிர்தா

கிருஷ்ணவேணி :—அம்மணி என்பிரிய சகோதரி! வீடுகளிலும் கோவில்களிலும் எங்கும் தோரணை அலங்காரம் வீட்டின் வாசல்களிலும், தெருக்களிலும் கோலமென்ன? வாத்தியம் பஜனை கோஷங்களென்ன? நம் நகரில் என்ன விசேஷம்?

சுகிர்தா :—நம் நகரிலும் தேசத்திலும் எங்கும் பொங்கல் பண்டிக்கை கொண்டாட்டம்.

கி.—இந்த பண்டிக்கையின் விசேஷ மென்ன?

சு.—இது தக்ஷணாயனம் மாறி உத்தராயணம் ஆரம்ப நாள். இது ஓர் சுப நாள். இந்த சுபதினத்தில் புது அரிசியை சுத்தமான இடத்தில் புதுபானையில் சமைத்து பகவானுக்கு அர்பணை செய்து தின்பது ஓர் நல்ல விருதம். சர்வகார்யத்திலும் ஸ்ரீ பகவானுடைய ஆதரவு தேவை. அவராலே சர்வ ஜீவராசிகளும். தாவர தாசவர்கங்களும் வசிக்கப்படுகின்றன அவராலே கொடுக்கப்பட்ட அன்னத்தை அவருக்கு அர்பணை செய்தும் தானம் செய்தும் தாம் புசிப்பது ஓர் நல்ல விருதம் இதனால் நமக்கு க்ஷேமமுண்டு.

கிருஷ்ணவேணி :—விருதம் என்றால் என்ன?

சுகிர்தா :—விருதம் என்றால் ஓர் அனுஷ்டானம் அல்லது பிரதிக்ஞை. இதையே உபவாசமென்றும் ஒருபொழுது என்றும் சாதாரண ஜனங்கள் சொல்லுவார்கள்.

கி.—ஒருபொழுது அல்லது உபவாசம் என்றாலும் விருதமென்றாலும் ஒன்றேயாகுமா?

சு.—இவ்விரண்டும் ஒன்றேயென்பது சாதாரண ஜனங்களினது நம்பிக்கை ஆனால் இதன் பொருள் வெவ்வேறே உண்டு.

கி.—அதென்னே ?

சு.—உபவாஸம் என்பது ஓர் வடமொழி. 'உப' என்ருல் சமீபம் அல்லது அருகில் 'வாஸம்' என்ருல் இருத்தல். ஆக உபவாஸம் என்ருல் ஸ்வாமியின் அருகில் இருத்தல் என்பது இதன் ரகஸ்யமான பொருள். ஒரு பொழுது இருப்பது மாத்திரம் விருதம் அல்லது உபவாஸமாகாது. ஆனுல் உபவாஸத்திற்கு ஒரு பொழுது இருப்பது அனுகூலமாகும். ஸ்நானஞ்செய்து மடிதரித்துக்கொண்டு கோயிலுக்குச்சென்று ஸ்வாமிதரிசனம் செய்து சுத்ததுடன் சமைக்கப்பட்ட அன்னத்தைமாத்திரம் பகலில்புசித்து இரவில் சில பக்ஷண வகைகளைச் சாப்பிடுதலே விருதம் என்பார்கள். விருதம் என்னும் பதத்திற்கு வேறு அர்த்தமுண்டு. இந்த மாதிரி அற்ப ஆகாரத்தை உண்பதும் பட்டினியாக இருப்பதும் விருதம் ஆகாது.

கி.—அப்படியானுல் விருதமென்ருல் என்ன சுகிர்தா ! விவரித்துக்காட்டு ?

சு.—விருதம் என்ருல் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரண சுத்தமாக ஓர் காரியத்தைச் செய்தல். இதைச்செய்வேன் அதை செய்யமாட்டேன் என்னும் ஓர் வாக்குத்தத்தஞ்செய்து அதன்படியே தவருமல் நடப்பது விருதமாகும். மஹா சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி இது போன்ற தினங்களில் அன்னம் புசியாமலும் எந்தப்பக்ஷணங்களையும் தினுமலும் இருப்பேன் என்று வாக்களித்து அந்தப்படி பட்டினியாயிருப்பது ஓர் விருதம்.

கி.—இதுதானு விருதங்கள் ? இன்னும் ஏதேனும் உண்டா ?

சு.—கிருத்திகை, ஏகாதசி, அமாவாசை, ஆதிவாரம், சோமவாரம், மங்களவாரம், சுக்கிரவாரம், அஷ்டமி, சஷ்டி முதலிய பல வகையுண்டு.

கி.—பலவகையுண்டு என்ருயே இன்னும் ஏதேனும் விருதங்கள் உளவோ ?



ஏ. பாலகிருஷ்ண உடையார்.   கருணாநந்தா.



திவான் பஹதூர் தி. ந. தர்மபூஷணம்
முத்தையா செட்டியார், F.R.S.A.M.L.C.
கருணாநந்தா.

சு.—பொய் பேசாமை, பேச்சுத் தவறாமை, தீங்கு செய்யாமை, திருடாமை, தேவபூஜை, பெற்றோர்க்குச் சேவை, தானஞ் செய்தல், கதியற்றவர்களைக் காப்பாற்றல், மித ஆகாரம் அல்லது உண்ணாமை சாஸ்திரம் ஓதல், பஜனை செய்தல், சாதுக்களை தரிசித்தல், அவரைக்காப்பாற்றல், மௌனம், ஏகாந்த வாஸம் முதலிய விருதங்களாகும்.

கி.—விருதங்களால் ஒருவர் அடையும் பயன் யாது ?

சு.—விருதங்களாலுண்டாகும் லாபம் எவ்வளவு என்று சொல்லவே முடியாது. விருதங்களை அனுசரித்து நடந்தவர்களே அதன் பயனைச்சரியாக உணர்வார்கள். பெரியோர்களென்று மதிக்கப்படுகிறவர்களெல்லோரும் ஆதியில் நம்மைப்போலச் சிறியவர்களாகவே யிருந்தார்கள். சில விருதானுஷ்டானங்களால்தான் அவர்கள் பெரியவர்களானார்கள். விருதங்களை அனுசரியாதவர்கள் மூடர்களே. அவர்கள் மிருகங்களுக்குச் சமானம். விருதங்களால் ஒருவன் மேற்கதியையும், விருதங்களில்லாமையால் கீழ்க்கதியையும் அடைகிறான்.

கி.—ஒவ்வோர் விருதத்தினது நோக்கமும் எதைக்குறித்து ?

சு.—ஒவ்வோர் விருதத்தின் நோக்கமும் விருதம் அனுஷ்டிக்கிறவாளது சுகத்தின் பொருட்டேயாகும். கண், காது முதலிய இந்திரியங்களுக் குட்பட்டிருப்பது துக்கமென்றும், அவற்றை ஜெயிப்பது சுகமென்றும் பெரியோரது அனுபவமாகும். எல்லா விருதங்களும் மனம் இந்திரியங்கள் இவைகளை ஜெயிப்பதன் நிமித்தமேயாகும். இந்திரிய போகமே சகல விதமான கஷ்டங்களுக்குங் காரணமாயிருப்பதால் நாம் சுகமடைய இச்சிப்போமாயின் விருதங்களை விட்டால் வேறு வழியே கிடையாது.

கி:—விருதம் இல்லாதாரின் கதி யென்ன?

சு:—அவர்கள் சதாகாலமும் துக்க சாகரத்திலேயே ஆழ்ந்து இருப்பார்கள். அவர்களுக்கு ஓர் க்ஷணமும சுகமென்பதே யிரா.

கி:—விருதத்தினல் சுகமெப்படி ? விருதமின்மையால் துக்க மெப்படி?

சு:—ஒவ்வொரு விருதத்தாலுண்டாகும் சுகமும் துக்கமும் இன்னதென்று விவரித்துச்சொல்லுகிறேன் கேள். ஸ்னானம் செய்யாமலும், மடி தரிக்காமலும், சாப்பிடமாட்டேன், பூஜை செய்யமாட்டேன் என்பவனுக்குப் பசியே அவனை ஸ்நானம் செய்யவைக்கும். பூஜை செய்யவைக்கும். ஸ்நானத்தாலும் சுத்த வஸ்திரத்தாலும் அவனுக்கு தேகாரோயம் கிடைக்கிறது. தவருமல் சுத்தமாக ஸ்வாமி பூஜை செய்தால் ஸ்வாமியின் அருளுக்குப் பாத்ரனுகிருன்.

கி:—ஸ்னனம், மடியினுடைய மகிமையைத் தெரிந்துகொண்டேன். ஆகார விருதத்தைச் சற்று சொல் கேட்போம் ?

சு:—மனிதர் நாவிற்கு உருசிகரமாயுள்ள பொருள்களையெல்லாம் அளவிற்கு மீறியும் புசிப்பதா லனேகமான கேடுகளுண்டாகின்றன. ஜீர்ணமாகாத வுணவுகளைத் தின்பதே வியாதிகளின் உற்பத்திக்குக்காரணம் அவைகளை மிதமாகவும் ஜீர்ணசக்திக்கு ஏற்றவாறு சாப்பிடுவோம் என்னும் விருதத்தால் ஜீர்ணசக்தி விருத்தியாகும். நோயணுகாது. அளவுக்கு மிஞ்சின உணவு மாத்திரமன்று. மயக்கத்தை யுண்டாக்கி மனம், புத்தி இவைகளைக்கெடுத்து வியாதியை யுண் டாக்கும் உணவுகளையும், பானத்திரவியங்களையும் சாப்பிடுவதனுல் உலகத்திலுள்ள அனேகவிதமான கஷ்டங்களும் துக்கங்களும் சம்பவிக்கின்றன. இவைகளைத் தொடமாட்டோம், பார்க்கமாட்டோம், சேவிக்கமாட்டோம் என்னும் விருதத்தால் நாம் சுகமேவாழலாம். நம் சித்தம் சுத்தியாகும். ஸ்வாமியினுடைய வரப்பிரசாதத்திற்கு யோக்கியராகிறோம்.

கி:—மயக்கத்தை உண்டு பண்ணும் பொருள்கள் எவை? காப்பி, டீ, கள்ளு, சாராயம், புகையிலையால் செய்த பீடி, சுருட்டு முதலியவும், அபினி, கஞ்சா முதலியவும் நம்மை நாசப்படுத்தும் பொருட்கள். இவைகளால் பண நஷ்டம் மானநஷ்டம். ஆரோக்கிய நஷ்டம் புத்திநஷ்டம் முதலியன



ஏகாம்பரம் பிள்ளை.
பினங்.



எளியதம்பி.
தைபிங்.

உண்டாகும். இவைகளை நீக்கி சாத்விக ஆகாரங்களாகிய பழம், தான்யங்கள், பால் முதலியவைகளை உண்ணுவதால் தேகத்திற்கு சுகமும், மனசாந்தியும் உண்டு. அன்னபானுதிகளில் மிதமாயும், மயக்கமுண்டாகும் பதார்த்தங்களை உபயோகிக்காமலும் இருப்போமேயாயின் கலகமில்லை, கோர்ட்டு கச்சேரிகளில்லை, போலீஸ் வியாஜ்ஜியமில்லை, வைதியரும் ஆஸ்பத்திரியும் இல்லை. ஸ்வர்கலோகத்தில் இருப்பதுபோல் இருக்கலாம்.

கி.—மாமிசம் சாப்பிடாத விருதத்தை ஏன் அனுசரித்தல் வேண்டும்?

சு.—ஆதியில் மானிடராயுள்ள நாம் மாமிச ஆகாரிகளல்ல. மாமிசம் சாப்பிடுவது ராக்ஷஸர்களுக்கு வழக்கம். மாமிசம் சாப்பிடுபவனுக்கு கொலை பாதகமுண்டு. நமக்கு நோவது போல் ஆடு, மாடு, கோழி, மீன்முதலியவைகளுக்கும் நோயுண்டு. ஜீவஜந்துக்களைத் தீங்குசெய்ய நினைப்பது பாவ காரியம். புலி, பூனை, நாய் முதலியவைகளைப்போல் மாமிச ஆகாரத்தால் மனிதன் குரூர குணமடைகிறான். ஆகையால், மாமிசம் சாப்பிடாதிருத்தலே நல்ல விருதம்.

கி.—விருதநாட்களிலும், ஆலயத்திற்குப்போம்போதும், சாதுக்களின் தரிசனத்துக்குப் போகும்போதும் ஏன் வஸ்திராபரணங்களால் தேகத்தை அலங்கரித்தல் கூடாது?

சு.—சாத்வீக அன்னபானுதிகளை மிதமாக புசித்துக்கொண்டு தின்னத்தகாதவற்றை நீக்கித் தேகத்தை யலங்கரிக்காதார் சுகமனுபவிப்பார். அவாள் மோக்ஷபதவிக்கு அருகிலே யிருப்பவராவர். சரீரபூஷணத்தால் ஆத்மபூஷணம் கெட்டுப் போகிறது. "சரீரம் வேறு, ஆத்மா வேறு" சரீரம் ஆத்மாவுக்கு விலக்ஷணமானது. ஒவ்வொரு தடவையும் சரீரத்தை சிங்காரிக்கும்போது ஆத்மநிலையிலிருந்து தவற நேரிடுகிறது. ஆகையால் 'வைராக்கியம்' முக்கியமானது. விவேகியானவன் வைராக்கியசாலியாகவே யிருப்பான். முமுக்ஷுக்கு விவேகமும் வைராக்கியமும் பக்ஷிக்கு இரண்டு ரக்கைகள் போல இருக்கும், படிப்படியாகச் சரீரத்தின் சுகத்தையும்

அழுகையும் நீக்குபவன் விவேகி. ஆகையால், சரீரத்தை அலங்கரிக்காத விருதம் ஓர் உத்தம விருதமாகும்.

கி.—ஏன் பஜனை அல்லது ஸ்வாமி ஸ்தோத்திரம் செய்தல் வேண்டும்?

சு.—காலையிலும், மாலையிலும், பகலிலும், இரவிலும் பகவானைத் துதித்தல் நமது கடமை. இதனால் நாம் பரிசுத்தராகிறோம். தாமிஷ்டர்களாகிறோம். கடவுள் நம்மைப்பார்த்து மெச்சுவார் நமக்கு எப்போதும் சுகமேயுண்டாகும்

கி.—சாஸ்திரத்தை விருதமாக ஓதல் வேண்டுமென்றனையே அது ஏனம்மா?


சு.—சாஸ்திரங்கள் நடந்துக்கொள்ளவேண்டிய தருமங்களைப் போதிக்கின்றன. உலக விவகாரமத்தில் தருமத்தை தவறுகிறோமாகையால் நமக்கு ஞாபகமாவதன்பொருட்டு சாஸ்திரம் ஓதல்வேண்டும்.

கி.—ஏகாந்த வாசம் என்றனையே! அவ்விரதத்தாலடையும் பயன் யாது?

சு.—ஏகாந்த வாசத்தால் விவகாரங்கள் குறைகின்றன. விவகாரங்கள் குறையக்குறைய மனம் பிரபஞ்ச விஷயங்களிலிராமல் பாரமார்த்திக விஷயங்களில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுகூலமுண்டு.

கி.—பிரம்மச்சர்யத்தின் விசேஷம் என்ன?

சு.—ஆணுக்கும் பெண்ணுக்கும் பிரம்மச்சரிய விருதத்தால் வீரிய பலமும், புத்தி விசாலமும், தேகாரோக்கியமும் ஆயுள் விற்தியும் உண்டாகும். 18 வயதானபிற்பாடு பெண்ணுக்கும், 25 வயதான பிறகு ஆணுக்கும் விவாகமாய் ஆரோக்ய சாஸ்திரத்தை யனுசரித்து பதிபத்தினியர் நடந்துகொள்வதால் இல்லறம் செவ்வனே நடைபெறும். ஏக பதிவ்விருதா தர்மத்தால் பெண்ணுக்கும், ஏக பத்னி விருதத்தால் ஆணுக்கும் நித்ய சுகமுண்டு, ஸ்திரீ புருஷரிடத்தில் பிரம்மச்சர்ய விருதம் கெட்டதால் உலகம் கெட்டது. அதைக் காப்பாற்றினால் உலகம் செழிக்கும்.



சாதுசங்கம். ராமசாமிராஜா. சிங்கப்பூர்.

கி.—திருடாமையும் ஓர் விருதமாகக்கொள்ள வேண்டுமா ?

சு.—இது கூடவா உனக்குச் சொல்லவேண்டும்! இது எல்லார்க்கும் தெரிந்த விஷயமாச்சே! திருடனை யார்தான் நம்புவார்கள்? அவன் எப்படி உலகத்தில் கௌரவமாக யிருக்கக்கூடும்? நாம் மற்றொருவரது பொருளையபகரிப்பதா லவருக்குத் துக்கமுண்டுபண்ணுங் காரணத்தால் திருடாமை என்னும் விருதத்தை யனுசரிக்கவேண்டும்.

கி.—'தானம் செய்தல் நன்று' என்றனையே, அது எதற்காக?

சு.—கடன் வாங்கினவர்கள் கடனைத் திருப்பிக்கொடுக்கக் கடமைப் பட்டவர்கள்போல் தானம் செய்வது நமது கடமையாகும். சர்வத்துக்கும் காரணரான கடவுளால் எல்லா உதவியையும் அடைகிறோம். சூரியன், சந்திரன் நக்ஷத்திரங்களும், பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐவகைப்பூதங்களின் மூலமாகவும் நாம் அடையும் லாபம் இவ்வளவென்று சொல்லமுடியாது. ஈசனுக்குத் தாஸராகிய நாம் சதா கடனாளியாகவே இருக்கிறோம். தாயின் கர்பத்திலிருந்துத் தேகத்யாகஞ் செய்யும் வரையிற் றயாநிதியான பரமாத்மாவுக்குக் கடன்காரர்களாகிறோம். இக்கடனை ஆதியில் பெற்றோர்க்குக் கொடுத்தல் வேண்டும். தினந்தோறும் தான் தின்பதற்குங் குடிப்பதற்கும் முன்னதாக யோக்கியர்களான மனிதர்கள் மிருகம் அல்லது பக்ஷி இவைகளுக்கு அன்னம் அளித்து பிறகு தான் புசிக்கவேண்டும். இது ஒரு பெரிய விருதம். தனக்குத் தினந்தோறும் அல்லது மாதந்தோறும் வரும் சம்பாதனையில் ஒரு பாகம் தானத்திற்காக வைத்து மிச்சபாகத்தை தன் சொந்தச்செலவுக்குத் தர்ம வழியில் செலவு செய்பவன் தானத்தின் ரஹஸியத்தை தெரிந்து கொண்டவனாவான். 'யஜ்ஞ தானதப: கர்மபாவனானி மனீஷிணாம்' என்னும் ஸ்ரீ கிருஷ்ண பகவானது வாக்கால் தானத்தால் நமது துன்பம் பவித்திரமாகும்.

கி.—'சத்தியம் அல்லது பொய்பேசாமை' என்பது ஓர் மஹா விருதம் என்று சொன்னாயே! அஃதென்ன ?

சு.—சத்திய விருதம் மஹாவிருதந்தான். சத்திய விருதத்திற்கு ஒத்த வேறு விருதமில்லை. சத்திய விருதத்தால் சகல விருதமும் நடக்கும். சத்தியம் தவறி நடந்தால் சகல விருதமும் தவறிவிடும். விருதமே சத்தியமெனப்படும். 'சத்தியம்' என்றால் திரிகாலத்திலும் இருத்தல். சத்யமே கடவுளது திருநாமமாகும். சத்யவாதிகளே தெய்வபக்தி யுள்ளவராவர். அவர்கள்தான் உண்மையான தத்துவத்தையறிந்தோர். பேச்சுத்தவராதவர். மோசம், வஞ்சனை, திருட்டு முதலிய அனுசாரமில்லாதவர். பொய் பேசாமை யென்னும் விருதத்தால் திருடன் திருடாமலிருப்பான். குடிகாரன் குடியாதிருப்பான் அதுபோல சகலவிதமான துராசாரங்களை நாசப்படுத்தி சதாசாரங்களை நிலை நாட்டலாம்.


கி.—பெற்றோர், குரு, சாதுக்கள் முதலியோர்களை சேவைசெய்தல் வேண்டுமென்று சொன்னாயே! அதேனம்மா?

சு.—அவாளுக்குப் பலவகையிலும் நாம் கடமைப்பட்டவர்களாயிருப்பதால் தினந்தோறும் நம்மால் கூடியவரையில் சேவை செய்து அவாளுக்குத் திர்ப்தியுண்டாக்கவேண்டும். அவர்களது ஆசீர்வாதம் நமக்கு வேண்டியிருப்பதால் அவர்களுக்கு நம்மாலான உதவிகளைக் கேளாமலேயே செய்யவேண்டும்.

கி.—இந்த விருதங்களெல்லாவற்றையும் அனுஷ்டிக்க வேண்டுமா? அல்லது ஏதோ சிலவற்றை மாத்திரம் அனுசரித்தல் போதுமா?

சு.—இவைகளெல்லாவற்றையும் அனுஷ்டிக்கவேண்டும். சரீரத்திற்குத் தலை, கண், காது, கை, கால் முதலிய அவையவங்களில் ஏதேனும் ஒன்று ஊனம் வந்தால் சரீரத்துக்குக் கஷ்டம் நேரிடுகிறது. அதுபோல இவைகளில் ஓர் விருதம் குறைந்தால் விருத மஹிமை குறையும்.

கி.—ஆனால் பௌத்தர்கள், துருக்கர்கள், கிருஸ்தவர்கள் முதலிய மதஸ்தர்கள் ஹிந்துக்களைப்போல ஏகாதசி முதலிய விருதாதிகளைக் கவனிப்பதில்லையே! அவர்களின் கதி என்ன? அவாளுக்கு முக்தியில்லையா?



சர். பி. ராஜகோபாலாச்சாரியார்.   திருக்கழுக்குன்றம்.

சு.—அவர்களிடத்தில் விருதங்கள் ஸ்னானம் மடி முதலியன இல்லையென்று சொல்லவேண்டா. நாம் நமது பெரியோர்களாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்ரீராமன் முதலிய பெரியோர்களை நினைத்து பெறுநாள் கொண்டாடுவதுபோல் வேறு மதஸ்தர்களும் அவரவர்களுடைய பெரியோர்களிடத்து பக்திவைத்து விருதநாட்கள் கொண்டாடுகிறார்கள் பொய் பேசாமை, திருடாமை முதலிய அனைத்தும் சர்வ மதத்திற்கும் சம்மதம். ஆனால் இந்துக்களுக்கும், வேறு மதஸ்தர்களுக்கும் சில பாகங்களில் பேதமாகக் காணப்படினும் முக்யமான அம்ஸங்களில் வித்யாஸமே கிடையா.

கி.—அப்படியானால் நாமேன் ஏகாதசிமுதலிய விருதங்களை அனுசரிக்கவேண்டும்? யார் எந்த மதத்தை கொண்டாலென்ன?

சு.—எல்லா மதங்களும் போதிக்கும் ஈஸ்வர தத்வம் ஒன்றேயாயினும் அதையறிந்துகொள்ளும் வழிகள் வேறுவேறாகவேயிருக்கின்றன. ஈஸ்வர தத்வத்தைத் தெரிந்துகொண்டு ஈசன் சந்நதியடைவதே எல்லா விருதங்களை யனுசரிப்பதன் நோக்கமாகும். பல மதங்களில் பல வழிகள் கூறப்பட்டாலும், ஹிந்துக்களின் சாஸ்திரங்கள் போதிக்கும் சாதனைகளைச் சிரந்தவைகளாகக் கைக்கொள்ளவேண்டும். ஆச்சார்யர்களுடைய நோக்கத்தைச் செவ்வனே யுணர்ந்துகொண்டு பூர்ண பக்தியோடு திரிகரண சுத்தமாக இந்த விருதங்களை அனுஷ்டிக்கவேண்டும். சிரதை, பக்தி, விவேகம், வைராக்யம் இவைகள் முக்யமானவை. ஸ்நானம், மடி, ஆகாரமுதலியவைகளிலே யிராமல் இவைகளை கர்மமாக அனுசரித்து சத்ய விருதம், அஹிம்சை முதலிய மேலான விருதங்களைக்கைக்கொண்டு ஈசன்கிருபைக்கு யோக்யர்களாயிருத்தல்வேண்டும்.

கி.—இப்போது விருத மஹிமையை யறிந்து கொண்டேன். ஆனால், என் சந்தேகமுழுதுந் தீரவில்லை. விரதானுஷ்டானங்களால் இகபரசுகங் கிட்டுமெனச் சொன்னாயே! அப்படியாராகிலும் அடைந்தவர்க ளிருக்கிறார்களா? இருந்தால் சொல். அதனால் எனது நம்பிக்கை உறுதியாகும்.


சு.—நம் பரத நாட்டிலும் உலகிலுள்ள வேறு தேசங்களிலும் விரதானுஷ்டானங்களால் மேன்மையடைந்தார் பலர் உளர். சாவித்திரிதேவி தனது ஏக பதிவிருதை தர்மத்தால் யமனை யும் ஜெயித்து தன் பர்த்தாவினது உயிரைக் காப்பாற்றியது லோகப்பிரசத்தம். அரிச்சந்திரனும், யுதிஷ்டிரரும் சத்திய விருதத்தால் மோக்ஷ கதி யடைந்த செய்தி எல்லோருக்குந் தெரிந்த விஷயமே. த்ருவரும், பிரகலாதரும் சிறு வயதி லேயே தெய்வபக்தியை விளக்கிக் காட்டினர்கள். பீஷ்மாச் சாரியர் தமது பிரம்மச்சரிய விரதத்தால் செய்த அற்புத காரியங்கள் நமக்குத் தெரிந்தவைகளே. தரும வியாதன் மாமிஸம் விற்பனை செய்தபோதிலும் பெற்ருேர்களின் சேவை யால் பரமபதவியடைந்தான். ஏகலைவன் வேடர் குலத்தவ னபோதிலும் தனது குரு பக்தியால் வில் வித்தையைத் தானகவே கற்றுக்கொண்டான். 'அஹிம்ஸா பரமோ தர்மா' என்னும் விருதத்தால் கௌதமபுத்தர் நிர்வாண கதியை யடைந்தார் இக்கலியுகத்திலுங்கூட மஹாத்மா காந்தி முதலியோர் அஹிம்ஸா பரமோ தர்மா! என்னும் விரு தத்தை யனுஷ்டித்து நடந்து உலகத்தாருக்கு மேல்வழி காட்டித் தாங்களும் பரம கதியிலிருப்பது நாம் நேரில் காண் கிறேம்.

கி.—விரதானுஷ்டானத்தால் முத்தி கிடைக்கும் என்பதற்கு சாஸ்திரப் பிரமாணம் யாது?

சு.—புத்த்யா விஸுத்தயா யுக்தோ த்ருத்யாத்மானம் நியம்யச|
சப்தாதீன் விஷயான் த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச||
விவிக்த சேவி லக்வாஸி யத வாக்காயமானஸ:|
த்யான யோகபரோ நித்யம் வைராக்யம் ஸமுபாஷ்ரித:||
அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் குரோதம் பரிக்ரஹம்|
விமுச்ய நிர்ம்ம ம: சாந்த்தோ ப்ரஷ்ம பூயாயகல்பதே||

இவை ஸ்ரீ கிருஷ்ணனுடைய வாக்கு. பகவத்கீதை 18-வது அத்யாயம் 51, 52, 53-வது ஸ்லோகங்கள்.

பரிசுத்தமான புத்தியினலும் தைரியத்தாலும் தன்னைத்தான்



ந. மு. சொ. ந. ம. பெரிய கருப்பன் செட்டியார். கருணைநந்தா.
அ. உ. ரங்கனுதம் செட்டியார்.
சைகோன்.

புடக்கம் செய்துக்கொண்டு சப்தமுதலிய விஷயங்களைவிட்டு கத்வேஷங்களைத் தடுத்து ஏகாந்தவாஸமாயிருந்து அற்பா ாத்தைப் புசித்துக்கொண்டு வாக்கு காயம் மனம் என்னும் ரணங்களை ஜெயித்து சதா தியான நிஷ்டையிலே யிருந் னுய் வைராக்கியத்தை யடைந்து அஹங்காரம், பலம், பம், ஆசை, கோபம், தனம் இவைகளை நீக்கி எதிலும் ாக்கு சொந்தமென்னும் எண்ணமற்றவனுய் சாந்தவடிவா ிருப்பவன் முத்தியடைய யோக்யனுகிறுன். ஸ்ரீபகவான் ாக்குப்படி இந்த விருதங்கள்தான் சிறந்தவைகள். நாம் க்தியுடன் இவ்விதமாக நடப்போமாயின் நமக்கு மேன்மை புண்டு. நமது ஆச்சார்யருக்கும் பெற்ருேர்க்கும் குலகோத்ர ாதி தேசத்திற்கும் கீர்த்தியுண்டு.

–சுகிர்தா! என்னிடத்து பூர்ண அன்புகூர்ந்து விருத ஹிமை விஷயத்தில் நான் கேட்ட பல கேள்விகளுக்கும் தகுந்த விடைகொடுத்து என்னிடமுள்ள சந்தேகத்தை நிவர்த்திசெய்து என்னையும் விருதானுஷ்டானத்தைக் கைப் பற்றச் செய்ததற்காக நான் கிருதார்த்தையானேன்.

சுபம். சுபம். சுபம்.